8 ஜனவரி 2025

மேதகு அனுர குமார திசாநாயக்க
இலங்கை ஜனாதிபதி
ஜனாதிபதி அலுவலகம்
கொழும்பு, இலங்கை

**<u>தைப் பொங்கலையொட்டி தமிழ் சமூகங்களை ஆதரிப்பதற்கான சிறப்பு நடவடிக்கைகளுக்கு வேண்டுகோள்</u>**

மேதகு ஜனாதிபதி அவர்களே,

நன்றி கூறல், புதுப்பித்தல் மற்றும் நம்பிக்கையின் கொண்டாட்டமான தைப்பொங்கலின் மங்களகரமான சந்தர்ப்பத்திலே, உங்களுக்கும் உங்கள் பாராட்டுக்குரிய நிர்வாகத்திற்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த விழா நாடு முழுவதும் உள்ள தமிழ் மக்களுக்கு ஆழமான கலாச்சார மற்றும் ஆன்மீக முக்கியத்துவம் வாய்ந்தது .

இவ்வேளையில் ஒற்றுமை மற்றும் உள்ளடக்கிய தன்மை உணர்வில், தமிழ் சமூகங்கள் எதிர்கொள்ளும் சவால்களை நிவர்த்தி செய்வதற்கும் இலங்கை முழுவதும் நல்லிணக்கத்தை ஊக்குவிப்பதற்கும் பின்வரும் நடவடிக்கைகளை உங்கள் நிர்வாகம் பரிசீலிக்க வேண்டும் என்று நான் மரியாதையுடன் கேட்டுக்கொள்கிறேன்:

**1. அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விநியோகம்**

- பாரம்பரிய பொங்கல் உணவைத் தயாரிப்பதற்குத் தமிழ் குடும்பங்களுக்கு உதவ அரிசி, சர்க்கரை மற்றும் முந்திரிப்பருப்பு போன்ற அத்தியாவசியப் பொருட்களை வழங்க வழிசெய்தல் மூலம் இம் மகிழ்ச்சியான கொண்டாட்ட வேளையில் அரசாங்கம் எமது சமூகத்துடனான கூட்டொருமையை எடுத்துக் காட்ட முடியும்.

**2. அரசியல் கைதிகளுக்கு தற்காலிக நிவாரணம்**

- பண்டிகைக் காலத்தில் அரசியல் கைதிகளுக்கு தற்காலிக வீட்டு விடுப்பு வழங்குதல் அல்லது குடும்ப வருகை சந்திப்புக்கு ஏற்பாடு செய்தல்.
- நல்லெண்ண நடவடிக்கையாக நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானவர்களை விடுவித்தல், போரின் வடுக்களை குணப்படுத்தி நம்பிக்கையை கட்டியெழுப்புதலை ஊக்குவிக்கும்.

**3. இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள நிலங்களை விடுவித்தல்**

- தற்போது இராணுவ ஆக்கிரமிப்பின் கீழ் உள்ள வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள நிலங்களை விடுவிப்பதை விரைவுபடுத்துதல் இடம்பெயர்ந்த குடும்பங்கள் தங்கள் வாழ்க்கையை மீண்டும் கட்டியெழுப்ப உதவும்.
- கோயில்கள் போன்ற மத மற்றும் கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த நிலங்களை விடுவித்து, அவற்றை உரிமையாளர்களிடம் கையளிக்கவும்.

**4. இந்திய இழுவைப் படகுப் பிரச்சினையைத் தீர்த்தல்**

- உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரத்தை அச்சுறுத்துவதுடன் தீராத மனவேதனையை ஏற்படுத்தும் இந்திய இழுவைப் படகுகளின் ஆக்கிரமிப்பை நிவர்த்தி செய்ய இந்திய அதிகாரிகளுடன் ஒத்துழைக்கவும். இது தொடர்பான நிலையான தீர்வுகள் கடல் வளங்களைப் பாதுகாப்பதுடன் பாதிக்கப்பட்ட சமூகங்களுக்கு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதி செய்யும்.

**5. பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை (PTA) ரத்து செய்தல்**

- நாட்டின் மனித உரிமைகள் ஆதரவாளர்களின் நீண்டகால கவலையான கொடூரமான பயங்கரவாதத் தடைச் சட்டத்தை (PTA) ரத்து செய்வதற்கான தெளிவான காலக்கெடுவை அறிவித்து, நீதிக்கான உங்கள் நிர்வாகத்தின் உறுதிப்பாட்டை நிரூபிக்கவும்.

**6. மாகாண சபைத் தேர்தல்கள்**

- நீண்டகாலமாக நிலுவையில் உள்ள மாகாண சபைத் தேர்தல்களுக்கு ஒரு உறுதியான தேதியை நிர்ணயித்து, பிராந்திய பிரதிநிதித்துவத்தையும் பயனுள்ள உள்ளூர் நிர்வாகத்தையும் உறுதி செய்யவும்.

**7. காணாமல் போனவர்களின் தாய்மார்களின் மன உளைச்சலை முடிவுக்குக் கொண்டுவருதல்**

- போர்க்காலத்தில் காணாமல் போன தங்கள் பிள்ளைகளைத் தேடி தாய்மார்கள் நடத்தி வரும் போராட்டங்களுக்கு இந்த விடயங்களை விசாரித்துத் தீர்ப்பதற்காக ஒரு பிரத்தியேகக் குழுவை அமைத்துத் தீர்வு காணுங்கள்.

**8. நீண்டகால தண்டனைகளை மதிப்பாய்வு செய்யவும்**

- நல்லிணக்கத்தை மையமாகக் கொண்ட மனிதாபிமான முயற்சியின் ஒரு பகுதியாக நீண்டகால தண்டனை அனுபவித்த கைதிகளின் விடுதலைக்கு முனைப்புச் செய்யவும்.

**9. தேசிய முயற்சிகளில் பன்முகத்தன்மை**

- தேசிய பன்முகத்தன்மையை பிரதிபலிக்கவும் எதிர்மறையான புரிதலை எதிர்கொள்ளவும் ‘சுத்தமான இலங்கை' போன்ற திட்டங்களில் தமிழ் மற்றும் முஸ்லிம் நிபுணர்களைச் சேர்ப்பதை உறுதி செய்யவும்.

**10. தமிழ் மொழி பயன்பாடை மேம்படுத்துதல்**

- அனைவருக்கும் நீதி மற்றும் நியாயத்திற்கான சமமான வாய்ப்பை உறுதி செய்வதற்காக அனைத்து துறைகளிலும், குறிப்பாக சட்ட அமலாக்கத் துறைக்குள், தமிழை அரசகரும மொழியாக பயன்படுத்துவதை வலுப்படுத்துங்கள்.

இவ்விடயங்களை கருத்தில் கொண்டு செயற்படுவதன் மூலம், உங்கள் நிர்வாகம் நேர்மையான நிர்வாகத்திற்கான அதன் அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், அனைத்து இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தையும் பரஸ்பர புரிதலையும் வளர்க்க உதவும்.

இந்த முக்கியமான பிரச்சினைகளில் உங்கள் கவனத்திற்கு நன்றி. அனைத்து இலங்கையர்களுக்கும் பிரகாசமான, உள்ளடக்கிய எதிர்காலத்தை உறுதி செய்ய உங்கள் தலைமை தீர்க்கமான நடவடிக்கைகளை எடுக்கும் என நம்புகிறேன்.

மரியாதையுடன்,

ராஜ் சிவநாதன்

**சர்வதேச ஒருங்கிணைப்பாளர்**
இலங்கைவாழ் தமிழர் நலன்விரும்பிகள்
**மெல்பன், அவுஸ்திரேலியா**
**மின்னஞ்சல்: rajasivanathan@gmail.com, தொலைபேசி: +61412067019**